புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com





ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 03, 2024 • புரட்சி 24 • முழக்கம் 39 • விலை ரூ.3.00


# சட்ட விரோத ஈஷா மையம் மூடப்படுவது எப்போது?

கோவையில் செயல்பட்டு வரும் கார்ப்பரேட் சாமியார் ஜக்கி வாசுதேவின் ஈஷா மையத்தின் மீது எழுந்துள்ள நூற்றுக்கணக்கான புகார்களின் பட்டியலில் புதிதாக ஒன்று இணைந்துள்ளது.

கோவை வடவள்ளி பகுதியைச் சேர்ந்த பேராசிரியர் காமராஜ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்தார். அதில், "எனது 2 மகள்கள் கீதா மற்றும் லதா ஆகியோர் ஈஷா யோகா மையத்தில் யோகா கற்றுக்கொள்ளச் சென்றவர்கள் அங்கேயே தங்கி விட்டனர். எனது மகள்கள் தனி அறையில் அடைத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதாகத் தெரிய வருகிறது. அவர்களைச் சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை. ஈஷா யோகா மையம் நடத்தும் ஜக்கி வாசுதேவிற்கும் ஒரு மகள் இருக்கிறார். அவர் திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டில் குடும்பத்துடன் வசிக்க சாமியார் ஜக்கி வாசுதேவ் அனுமதி தந்துள்ளார். எனது மகள்கள் அங்கிருந்து வெளிவந்தால் அவர்களைத் தொந்தரவு செய்ய மாட்டோம். அவர்களுக்கென தனி இடத்தைக் கொடுத்து அவர்களுடைய தனிமை பாதுகாக்கப்படும். எனவே, இரு மகள்களை மீட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்" எனக் கோரி இருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், சிவஞானம் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மகள்கள் இருவரும் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களிடம் நீதிபதிகள் விசாரணை நடத்தினர். அப்போது நீதிபதிகள் வழக்கு தொடர்பாக பல்வேறு கருத்துக்களைக் தெரிவித்தனர். மேலும் ஈஷா யோகா மையம் மீது எத்தனைக் குற்ற வழக்குகள் உள்ளது? என்பன போன்ற விவரங்களைப் போலீசார் அறிக்கையாகத் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது.

உயர்நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து கோவை மாவட்ட எஸ்பி கார்த்திகேயன் தலைமையிலான போலீசார் மற்றும் சமூக நலத்துறை அதிகாரி அம்பிகா தலைமையிலான குழுவினர் சுமார் 50க்கும் மேற்பட்டோர் ஈஷா யோகா மையத்துக்கு சென்றனர். அங்கு அவர்கள் ஆய்வு மேற்கொண்டு விசாரணை நடத்தினர்.

மையத்தில் உள்ள தன்னார்வலர்கள், வெளிநாட்டில் இருந்து இங்கே வந்து தங்கியிருப்பவர்கள், அவர்களுக்கு மையத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு, விருப்பத்தின் அடிப்படையில் இங்கே தங்கியிருக்கிறார்களா?, கட்டாயப்படுத்தி துறவறத்தில் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்களா? போன்ற விவரங்களை அதிகாரிகள் சேகரித்தனர். மேலும் மையத்தில் தங்கியிருப்பவர்கள் தங்களது உறவினர்களைச் சந்திக்க முறையாக அனுமதி வழங்கப்படுகிறதா?, கட்டாயத்தின் பேரில் சட்ட விதிமுறைக்கு மாறாக யோகா மையம் செயல்பட்டு வருகிறதா? என்ற விவரங்களையும் போலீசார், சமூக நலத்துறையினர் சேகரித்தனர்.

ஈஷா மையத்தின் மீது இத்தகைய குற்றச்சாட்டு எழுவது முதன்முறையல்ல. 2016ஆம் ஆண்டில் மதுரை திருப்பாளையத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்ற ஓய்வு பெற்ற உளவுத்துறை காவலர் 12 இலட்சம் ரூபாய் பணம் கட்டி 2 மகன்களை ஈஷா மையத்தில் சேர்த்தார். சில மாதங்களிலேயே இருவரும் கடுமையாக மனநலம் பாதிக்கப்பட்டு வெளியேறினர். மொட்டை அடித்துக் கொள்வது, கழிவறைச் சுத்தம் செய்ய வைப்பது, மாட்டுச்சாணி அள்ள வைப்பது, மையத்தில் உள்ளவர்களின் துணிகளைத் துவைத்து தருவது, வெளிநாட்டவர் தங்கியுள்ள அறைகளைச் சுத்தம் செய்ய வைப்பது என சிறுவர்கள் மிக மோசமாக நடத்தப்பட்டுள்ளனர்.

2014ஆம் ஆண்டில் ஈஷா மையத்திற்குச் சென்ற சுவீடனைச் சேர்ந்த ஜெயபால் என்ற பெண், தன்னிடம் நாலரை இலட்சம் ரூபாயைப் பிடுங்கிக் கொண்டதாக ஈஷா மையத்தின் மீது புகாரளித்தார். ஈஷா மையம் தொடங்கப்படுவதற்கு முன்பிருந்தே இந்த ஜக்கி வாசுதேவ் மீது எக்கச்சக்கமான புகார்கள் உள்ளன. 48 ஆண்டுகளுக்கு முன்பு கோவை ப்ரூபாண்ட் ரோடு மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் இவர் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்ததாக கோவை காட்டூர் பி3 காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது. அப்போது இவரோடு நெருக்கமாக இருந்தவர் ரவுடி ரிச்சர்டு. இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்ட பின்னர், ரவுடி ரிச்சர்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்தும், ஈஷா மையத்தில் நடைபெறும் முறைகேடுகள் குறித்தும் ஜக்கி வாசுதேவிடம் கேள்வி எழுப்பிய மூத்த பத்திரிகையாளர் பூபதி கண்ணன் 2011ஆம் ஆண்டில் ஈஷா மைய குண்டர்களால் தாக்கப்பட்டார். ஈஷா மையத்தில் ஜக்கியின் படங்கள், படம் பொறித்த பனியன்கள், வேட்டிகள், மாலைகள், நகைகள், லிங்கங்கள், உத்திராட்ச மாலை, ஸ்படிக லிங்கம் உள்ளிட்ட பொருட்கள் சந்தை மதிப்பை விட பல மடங்கு கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. இவற்றிற்கு சட்டவிரோதமாக ஒன்றிய அரசு வரி விலக்கு அளிக்கிறது. யானை வழித்தடத்தை ஆக்கிரமித்துக் கட்டடங்கள் எழுப்பியதையும் வனத்துறை கண்டும் காணாமல் இருக்கிறது. 4,27,700 சதுர மீட்டர் அளவில் வனப்பகுதியில் கட்டடங்களைக் கட்டியுள்ள ஈஷா மையம், இதுவரை "ஹாக்கா" (Hill Area Conservation Authority) அமைப்பிடம் அனுமதி வாங்கவில்லை.

அனுமதியில்லாமல் இயங்கும் ஈஷா மையத்திற்கு 24 மணிநேரமும் தடையில்லா மின்சாரம் வழங்க தனி அரசாணையே வெளியிடப்பட்டுள்ளது. காவேரி கூக்குரல் என்ற பெயரில் ஜக்கி வாசுதேவ் பல தொழிலதிபர்கள், சினிமா பிரபலங்களை வைத்து துவங்கிய திட்டத்தில் 10,626 கோடி ருபாய் ஊழல் நடந்ததாகவும் வழக்கு நிலுவையில் உள்ளது. மடக்காடு, முட்டத்துவயல், கரும்புக்காடு, முள்ளாங்காடு, பட்டியார்பதி, செம்மேடு, பச்சாம்வயல் உள்ளிட்ட பழங்குடி கிராம மக்களுக்கு சொந்தமான 44 ஏக்கர் நிலம் ஈஷா மையத்திற்குள் இருப்பதாகவும் புகார் உள்ளது. அந்த இடத்தில்தான் 2016ஆம் ஆண்டில் பிரதமர் மோடி ஈஷாவில் திறந்துவைத்த ஆதியோகி சிலையும் உள்ளது. இதுபோல நூற்றுக்கணக்கான புகார்கள் கார்ப்பரேட் சாமியார் ஜக்கி வாசுதேவ் மீது பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன.

மதத்தின் பெயரால், பக்தியின் பெயரால் பெரும் சமூக விரோதக் கூடாரமாகத் திகழும் ஈஷா மையம் நிரந்தரமாக மூடப்படுவதே ஒன்று, அப்பாவி மக்களை காக்கும் ஒரே வழி.

# பெரியாரிஸ்ட் உதயநிதியை வரவேற்கிறோம்!

உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். கடந்த சில மாதங்களாகவே உதயநிதி துணை முதல்வராவது குறித்தப் பேச்சுக்கள் தான் ஊடகங்களில் பேசு பொருளாக இருந்தது. உதயநிதி ஸ்டாலின் ஒரு மிகச்சிறந்த பெரியாரிஸ்ட் மற்றும் பகுத்தறிவாளர் ஆவார். சுயமரியாதை, சமூகநீதிக் கொள்கைகளில் அழுத்தமான உறுதிக்கொண்டவர். இதை வெளிப்படையாகவே அவர் அறிவித்திருக்கிறார்.

டெங்கு, மலேரியாவைப் போல் சனாதனமும் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியதற்காக உதயநிதி ஸ்டாலின் மீது இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சங்பரிவார கும்பல்கள் வழக்குத் தொடுத்தன. ஆனால் இந்த வழக்குகளுக்கு எல்லாம் அவர் அஞ்சி நடுங்கிடவில்லை. உளவியல் ரீதியாக அவரை நிலைகுலையச் செய்துவிடலாம் என்ற எதிரிகளின் கணிப்பைத் தவிடுபொடியாக்கினார். 2023இல் இராயப்பேட்டையில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பொங்கல் விழாவில் கலந்து கொண்ட உதயநிதி ஸ்டாலின் "நான் ஒரு கருப்புச்சட்டைகாரன்" என்று தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார்.

மிக எளிமையான தோற்றம், அழுத்தமான கருத்துகளைப் பதிவு செய்பவர். அவருக்கு இளைஞரணிச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்ட போது அதில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டார். தி.மு.கவுக்கு வரும் இளைஞர்களைக் கொள்கையாளர்களாக மாற்ற பயிற்சிப் பட்டறைகளை நடத்தினார். பெரியார் இயக்கச் செயற்பாட்டாளர்களான கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் கழக அருள்மொழி, பேராசிரியர் சுப.வீரபாண்டியன் போன்றவர்களை அழைத்து வகுப்பெடுத்தார். அதேபோல சேலத்தில் நடைபெற்ற இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டையும் திராவிட இயக்க மாநாடாகவே



நடத்திக்காட்டினார்.

விளையாட்டுத்துறை அமைச்சரான பிறகு புதிய விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்பட்டன. விளையாட்டு வீரர்களுக்கு தேவையான உள் கட்டமைப்பு வசதி, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை மிகச்சிறப்பாகச் செய்து முடித்தார். மேலும் சர்வதேச பார்முலா 4 கார் பந்தயம், செஸ் ஒலிம்பியாட் எனப் பல்வேறு சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை உலக நாடுகளே வியக்கும் அளவிற்கு நடத்திக் காட்டினார்.

நிர்வாக ரீதியிலும் தனது முத்திரையைப் பதித்தார் உதயநிதி ஸ்டாலின். அதிகார வர்க்கம் அமைச்சர்களை மிரட்டித் தங்கள் வலைக்குள் விழச் செய்து வருவதை சமீபகாலமாக நாம் பார்த்து வருகிறோம். இந்தச் சூழ்ச்சிகளுக்குச் சிக்காமல் இருப்பவர்கள் தான் மக்களுக்கான தலைவர்களாக இருக்க முடியும். அரசுத்துறைகளில் ஆய்வு செய்வதில் வித்தியாசமான முறையைக் கையாண்ட அவர், அதிகாரிகள் படிக்கும் அறிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், ஏற்கனவே கள நிலவரங்களை அறிந்து பின்னர் துறை சார்ந்த அதிகாரிகளைக் கேள்விக் கணைகளைத் தொடுத்து அதிகாரிகளின் முகத்திரையைக் கிழித்தெறிந்தார். இதனால் பல அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அவரின் மிகச்சிறந்த செயல்பாடுகளால் கூடுதலாகத் துணை முதல்வர் பொறுப்பும் அவருக்குக் கிடைத்துள்ளது. இதனைப் சிலர் வாரிசு அரசியல் என்று கூறிவருகிறார்கள். அது குறித்து நமக்கு எந்தக் கவலையும் இல்லை. காரணம், நம்மைப் பொறுத்தவரையில் உதயநிதி ஸ்டாலினைக் கொள்கை வாரிசாகத்தான் கருதுகிறோம். தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரம் இளைஞர்களை நோக்கி நகர்ந்து வருகிறது. சங்கிகளும், போலி தமிழ்த்தேசியக் கும்பலும், திரைப்பட பிம்பங்களோடு வருகிறவர்களும் இளைஞர்களைக் குறிவைத்து வருகிறார்கள். அந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டிய கடமை உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு. இதிலும் அவர் வெற்றிக் கொடி நாட்டுவார் என்று உறுதியாக நம்புகிறோம்.

பெரியார் தொண்டர், பகுத்தறிவுவாதி, சனாதனத்தை எந்தவொரு அதிகார மிரட்டலுக்கும் பயப்படாமல் எதிர்க்கும் துணிச்சல் மிக்க இளைஞரான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வரானது வரவேற்கத்தக்க ஒன்று. இந்தச் சூழலில் அவருக்கு எதிர்ப்புகள் வருகிற போது பெரியாரிய இயக்கங்களும், முற்போக்கு இயக்கங்களும் துணை நிற்கும்.

தலையங்கம்

## அறிவியலைக் கண்டு ஏன் அஞ்சுகிறீர்கள்?

அறிவியலைக் கண்டு அஞ்சுகிறது மதவாதம்; உண்மையான விஞ்ஞானிகளை அடையாளப்படுத்தாமல் போலி அறிவியலைப் பரப்புவோருக்கு விஞ்ஞானி என்று மகுடம் சூட்டி விருது வழங்கத் தயாராகிறது ஒன்றிய பாஜக ஆட்சி. இதுவரை ஒன்றிய விஞ்ஞான அமைச்சகம், விஞ்ஞானிகளைத் தேர்வு செய்யும் முறையைத் திடீரென மாற்றியுள்ளது. அறிவியல் இயக்கங்கள் மற்றும் அறிவியலாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் தான் இத்தனை ஆண்டுகாலம் விருதுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அறிவியலில் சாதனை புரிந்த விஞ்ஞானிகள் விருதுகளைப் பெற்றுவந்தனர். இவர்கள் பாஜகவின் போலி அறிவியலையும், வரலாற்றுப் புரட்டுகளையும் ஏற்காமல் உண்மைகளை உரத்துப் பேசுகிறார்கள். அந்தக் கருத்துகள் சர்வதேச அளவில் மதவாத மூட நம்பிக்கை கருத்துகளை அம்பலப்படுத்தியது. அதன் காரணமாக விஞ்ஞானிகளைத் தேர்வு செய்யும் பொறுப்பைத் திடீரென மாற்றியமைத்திருக்கிறார்கள். விருதுகள் வழங்கப்படும் விஞ்ஞானிகள் தேர்வு செய்யப்படும் முறையிலும் மாற்றம் கொண்டுவந்துள்ளது ஒன்றிய பாஜக ஆட்சி. இனி விஞ்ஞான அமைச்சகத்தின் தனி அதிகாரியான முதன்மை அறிவியல் ஆலோசகர் மட்டுமே இது குறித்த முடிவுகளை எடுப்பார் என்றும் அறிவித்து அதற்கான விதிகளையும் மாற்றியமைத்திருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 7ஆம் தேதி இணையத்தில் இதற்கான விதிகள் திடீரென மாற்றப்பட்டுள்ளன. இதனால் ஏற்கனவே விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட விஞ்ஞானிகளின் பெயர்ப் பட்டியலில் இருந்து பலருடைய பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட அத்தனை விஞ்ஞானிகளும் ஒன்றிய ஆட்சியின் போலி அறிவியலுக்கு, வரலாற்றுப் புரட்டுகளுக்கு எதிராகக் கடுமையான கருத்துகளை முன் வைத்தவர்கள் என்று வாசுதேவன் முகுந்த் என்ற ஆய்வாளர் இந்து ஆங்கில நாளேட்டில் (01.10.2024) எழுதிய கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்றிய விஞ்ஞான அமைச்சகம் அறிவியலுக்கு எதிரான கருத்துகளைப் பரப்புவதற்கு உயர்கல்வி நிறுவனங்களைப் பயன்படுத்திவருகிறது. அந்தக் கல்வி மய்யங்களில் அதிகாரத்தில் இருக்கும் மநுநீதியாளர்கள் இந்தத் திட்டங்களுக்கு செயல் வடிவம் தருகிறார்கள். இதற்கு ஏராளமான சான்றுகளை எடுத்துக்காட்ட முடியும். உதாரணத்திற்கு 2021ஆம் ஆண்டு கான்பூர் ஐ.ஐ.டி. வேத காலண்டர் ஒன்றை வெளியிட்டது. அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும், தொல் பொருள் கண்டுபிடிப்புகளுக்கும் வேதங்களின் சாயத்தைப் பூசியது இந்தக் காலண்டர். ஹரப்பா, மொகஞ்சாதரோ ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ‘பசுபதி’ என்ற முத்திரைக்கு வேதகாலத்து சிவன் என்று இந்தக் காலண்டரில் குறிப்பிட்டார்கள். மற்றொன்று 2022இல் கான்பூர் ஐ.ஐ.டி ஆன்மீக குரு என்று *ஸ்ரீ ஸ்ரீ* ரவிசங்கரைத் தனது ஆலோசகராக நியமித்தது. அவரது சீடர்களாகப் பரிந்துரைக்கப்பட்டவர்களை அதே ஐ.ஐ.டியில் மாணவர்களாக சேர்த்துக்கொண்டது. ‘வேத காலத்திலேயே ஜனநாயக ஆட்சி நடந்தது’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றை நடத்துமாறு பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி) அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் உத்தரவிட்டது. அதுவும் அரசியலமைப்பு நாளான நவம்பர் 26ஆம் அன்று இந்தக் கருத்தரங்கை நடத்த வேண்டும் என்று அந்த சுற்றறிக்கை கூறியது. கடந்த ஆண்டு அகில இந்திய மருத்துவ நிறுவனம் ஒரு கருத்தரங்கை நடத்தியது. கருத்தரங்கின் தலைப்பு ‘‘புராணங்களில் மருத்துவம் – விஞ்ஞானம்’’. இந்தக் கருத்தரங்கில் மருத்துவர்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நிலவுக்குச் சுற்றுலா செல்லும் அறிவியல் யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்திய ஆய்வு மய்யத்தின் தலைவர் எஸ். சோம்நாத் விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்களைப் புரிந்துகொள்வதற்கு சமஸ்கிருத மொழி அறிவு பெரிதும் பயன்படுகிறது என்று கூறுகிறார். ஆனால் அதை நிரூபிப்பதற்கு எந்தச் சான்றையும் அவர் முன்வைக்கவில்லை. கேரளாவில் நிலச்சரிவு ஏற்பட்டதற்குக் காரணம் அங்கு வாழ்ந்த மக்கள் மாட்டுக்கறி சாப்பிட்டது தான் என்று வெட்கமில்லாமல் கூறுகிறார் மாண்டி ஐ.ஐ.டி. இயக்குநர் லட்சுமி தர் மெகாரா. அறிவியலை வளர்த்தெடுக்க வேண்டிய உயர்கல்வி மய்யங்கள் முறைகேடாக மூடநம்பிக்கையை வளர்ப்பதற்கு தான் பயன்படுகின்றன.

கொரோனாவை விரட்ட வீடுகளில் விளக்கேற்றச் சொன்னவர் தான் மோடி. அண்மையில் ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு கூத்து நடந்திருக்கிறது. ஜெய்ப்பூர் ஹெரிட்டேஜ் நகர சபையில் சில உறுப்பினர்கள் காங்கிரசில் இருந்து விலகி சேர்ந்தார்கள். அவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு உள்ளது. அவர்களை சுத்தப்படுத்த பால் முகுந்த் ஆச்சாரியா என்ற பாஜக சட்டமன்ற உறுப்பினர் கட்சி மாறியவர்களை வரிசையாக நிற்க வைத்து அவர்களை மாட்டு சிறுநீரான கோமியத்தைக் குடிக்க வைத்திருக்கிறார். அவர்கள் உடலின் மீது கங்கை நீரைத் தெளித்திருக்கிறார். மாட்டு மூத்திரமும் கங்கை நீரும் உடலின் மீது பட்டால் ஊழல் கறை மறைந்து போகும் என்று கூறி இந்தச் சடங்குகளை நடத்தி பாஜகவில் அவர்களை அனுமதித்து இருக்கிறார். இப்படிப்பட்ட கூத்துகள் தான் இந்த ஆட்சியில் நடைபெற்று வருகின்றன. பகுத்தறிவாளர்களும், விஞ்ஞானிகளும் இந்த மூடத்தனத்தை அம்பலப்படுத்துகிறார்கள் என்ற காரணத்தினால் தான் உண்மையான விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்குவது கூட இந்த ஆட்சியில் மறுக்கப்பட்டு வருகின்றது.

## லப்பர் பந்து



அண்மைக் காலமாக தமிழ் திரைப்படங்கள் ஜாதிய ஒடுக்குமுறைகளை ஆழமாகப் பேசத் தொடங்கியிருக்கின்றன. சமூக நீதியின் விளைச்சல் களாக அருமையான இளம் படைப்பாளிகளைத் தமிழ் நாடு உருவாக்கியிருக்கிறது. சமூகக் கவலையோடு அவர்கள் படைப்புகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். ஜாதி எதிர்ப்பை முன்வைத்து வந்துள்ள படங்கள் தீண்டப்படாத மக்களின் துயரங்கள், அவர்களின் மீதான ஒடுக்குமுறைகள், ஜாதித் திமிரின் ஆதிக்கம், அதை எதிர்த்துப் போராடுகிற இளம் போராளிகள், ஜாதி மறுப்புக் காதலர்கள் என்ற கண்ணோட்டத்திலேயே பல படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதில் இருந்து ஒரு மாறுபட்ட ஒரு பார்வையில் வந்திருக்கக் கூடிய ஒரு படம் தான் லப்பர் பந்து. ஜாதித் தடைகளைக் கடந்து செல்லும் வாழ்க்கைப் பாதைக்கு ஒளியைக் காட்டுகிறது இந்தத் திரைப்படம்.

தலித் பெண்ணை மணந்த பிற்படுத்தப்பட்ட ஜாதி இளைஞன். அந்த இணையர்களுக்கு பிறந்த பெண்ணைக் காதலித்துத் திருமணம் புரிய விரும்பும் தலித் இளைஞர். “மாமனார் – மருமகன்” என இந்த தரப்புகளுக்குமான தன் முனைப்புகளில் இருந்து அவர்கள் எப்படித் தங்களை விடுவித்துக் கொண்டார்கள் என்பதை அற்புதமான திரை மொழியில் உருவாக்கி இருக்கிறார் அறிமுக இயக்குனர் தமிழரசன் பச்சமுத்து. எதார்த்தமான கிராமத்து இளைஞர்களையும், கிராமத்து குடும்ப உறவுகளையும் கண் முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள் ஒளிப்பதிவாளர் தினேஷ் மற்றும் கலை இயக்குனர் வீரமணி கணேசன் கூட்டணி. பட்டு கத்தரித்தது போல் நறுக்கான வார்த்தைகளோடு வெடிக்கும் கூர்மையான வசனங்கள். மாடு வெட்டும் இறைச்சிக் கூடம்; மாட்டுக்கறி உண்பவர்களே வளர்க்கும் மாடுகளின் மீது காட்டும் பாசம்; வாயில் நெருப்பான வார்த்தைகள் வெடிக்கும், ஆனால் உள்ளத்தில் ஆழமாகப் புதைந்து கிடக்கும் காதல் உறவுகள் என்று துல்லியமான உணர்வுகளைக் காட்சிகள் வெளிப்படுத்துகின்றன. “நான் அண்ணன் தம்பி மாதிரி தான் தலித் நண்பர்களோடு பழகி வருகிறேன் என்ற உரையாடலுக்கு அந்த மாதிரி என்பதில் தான் பிரச்சனையே இருக்கிறது” என்று கூறுகிற பதில். “பெண்களை கிரிக்கெட் போட்டியில் சேர்க்கலாமா? என்ற கேள்விக்கு ஜாதித் திமிரைப் போல இதுவும் ஆணாதிக்கத் திமிர் தான்” என்ற பதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

கிராம கிரிக்கெட் அணியின் விளையாட்டு மைதானங்களின் ஊடாக ஜாதிப் பிரச்சனை பேசப்படுகிறது. அந்த இரண்டு விளையாட்டு அணிகளிலும் தலித் – பிற்படுத்தப்பட்ட வீரர்கள் களத்தில் விளையாடுகிறார்கள். ஆனாலும் அணிகள் ஜாதிக் குறியீட்டைத்தான் தாங்கி நிற்கின்றன. இறுதிப் போட்டியில் தலித் குறியீட்டை தாங்கி நிற்கும் அணியின் தலைவர் வேறு ஜாதி அணியே வெற்றி பெறட்டும். அதன் வழியாக அந்த அணியில் தலித் இளைஞர்களின் திறமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலை உருவாகும். வெற்றியை விட திறமையின் அங்கீகாரமே முக்கியம் என்ற கருத்தோடு படம் நிறைவடைகிறது. ஜாதி ஒழிப்புப் போராட்டத்தை முன்னெடுக்க சுயஜாதி மறுப்பாளர்களே இன்றைய வரலாற்றுத் தேவை என்பதை படம் மிகச்சிறப்பாக உணர்த்துகிறது.

படத்தில் அட்டக்கத்தி தினேஷ், ஹரிஷ் கல்யாண், சஞ்சனா கிருஷ்ண மூர்த்தி, ஸ்வாசிகா விஜய், காளி வெங்கட், தேவதர்சினி, அகிலா, கீதா கைலாசம், TSK ஆகியோர் கச்சிதமான நடிப்பை வழங்கியிருக்கிறார்கள். வரவேற்கக்கூடிய ஒரு திரைப்படம் லப்பர் பந்து.

**– கண்டு வந்தவன்.**

## வாழ்க உதயநிதி!

**- குயில்தாசன் -**



**வரவேற்றுப் போற்றிடும் பெரியார் படையே**
**சூழ்ச்சிமிகு ஆரிய வேதியர் ஓடவும்**
**சூழ்ந்துவரும் அய்ந்தாம் படையது ஒழியவும்**
**தலைநிமிர்ந்து தமிழினம் தன்மானத் தோடே**
**மலைஉயர் தன்மதிப்பால் பகுத்தறி வாலே**
**அலைகடலும் அமைதியுறும் நின்அன் பாலே**
**கலையழகே! பெரியாரின் பெயரனே வாழி!**

# திராவிட இயக்கம் பேசுவது

# இனவெறி அல்ல; இனத்தின் விடுதலை!

**21.09.2024 அன்று சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற “அன்றே எச்சரித்தார் பெரியார் – பறிபோகும் மாநில உரிமைகள்” பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ் ஆற்றிய உரையின் தொகுப்பு.**

**மனோ தங்கராஜ்**



பெரியார் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். காரணம் தந்தை பெரியார் ஏற்படுத்திய சுயமரியாதை உணர்வு. சுயமரியாதையோடு மற்றவர்களையும் மதிக்கும் பண்பு. அதே போன்று நம்மை மானம் இழக்கச் செய்து, நமது உரிமைகளைப் பறித்து நம்மை நிராயுதபாணிகளாக மாற்றி, பல்வேறு மூடநம்பிக்கைகளைக் கற்பித்து அதை நம்ப வைத்து நமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளில் இருந்து விடுதலைப் பெறுவதற்காகவே, தன் வாழ்நாளெல்லாம் உழைத்தவர் தந்தை பெரியார்.

எனக்கும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருக்கும் நீண்டகாலத் தொடர்பு இருக்கிறது. நான் கடந்துவந்த பாதையை அடிக்கடி நினைத்துப் பார்ப்பது உண்டு. நான் கொளத்தூர் மணி அவர்களைக் கூடங்குளம் அணு உலைக்கு எதிரானப் போராட்டக் களத்தில்தான் முதன்முதலாகச் சந்தித்தேன். அப்போது அவரைச் சார்ந்த தோழர்கள் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வந்திருந்தனர். அதுமட்டுமில்லாமல் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான பரப்புரையைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கு எங்களுக்கு உறுதுணையாக இருந்த இயக்கம் திராவிடர் விடுதலைக் கழகம். அந்த வகையில் என்றைக்கும் திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதை நான் இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம், சமூகத்தில் இருக்கின்ற பிரச்சனைகளைக் கையில் எடுக்கும் பக்குவம் திராவிடர் விடுதலைக் கழகம் போன்ற சமூக இயக்கங்களுக்குத்தான் உண்டு.

நீங்கள் ஏன் சனாதனத்தை எதிர்த்துப் பேசுகிறீர்கள், அடிமைத்தனம் எல்லா இடங்களிலும் உண்டு என்று என்னிடம் பலரும் கேட்டுள்ளனர். போரில் தோல்வியடைந்தவர்களை வெற்றி பெற்றவர் அடிமையாக எடுத்துக் கொள்கிறான். மற்ற நாடுகளில் மிகப்பெரிய நபராக இருப்பவர்கள் கூட அடிமையாக மாறக்கூடும். ஆனால் இந்தியாவில் இருக்கக்கூடிய அடிமைத்தனம் என்பது அப்படிப்பட்டது அல்ல. அதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் ஏற்பட்ட அடிமைத்தனம் போரினால் ஏற்பட்ட அடிமைத்தனம் அல்ல, தனது பலத்தைப் பயன்படுத்தி பலவீனமானவர்களை அடிமைப்படுத்தியது அல்ல. இது சித்தாந்த அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட அடிமைத்தனம் ஆகும்.

ஜாதியக் கட்டமைப்பை எதிர்ப்பதும், சமத்துவத்தைப் பேசுவதும், மதச்சார்பற்ற தன்மையைக் காக்கப் போராடுவதும், பெண்களுக்கு எதிராக நிகழும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதையும் கலாச்சாரப் படுகொலை என்று ஆளுநர் ரவி கூறுகிறார். இது எப்படிப்பட்ட ஆணவமானப் பேச்சு. பெண்கள் குழந்தையாக இருக்கும் போதே திருமணம் செய்து வைக்கப்படுகிறார்கள். அந்தப் பெண்ணின் கணவர் இறந்துவிட்டால் அந்தப் பெண்ணை உடன்கட்டை ஏறச்செய்தனர். இல்லையென்றால் விதவையாக்கப்பட்டு, அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டது.

விதவை மறுமணம் கூடாது. பெண்களுக்கு சொத்தில் உரிமைக் கிடையாது. அவர்களுக்கு அனைத்துவிதமான உரிமைகளும் மறுக்கப் பட்டு நிரந்தர அடிமைகளாக வீட்டில் முடக்கிவைக்கப்படுகிறார்கள். ஆனால் இந்திய வைசிராயாக இருந்த வில்லியம் பெண்டிங்தான் முதன்முதலாக சதி என்னும் உடன்கட்டை ஏற்றுவதை முடிவுக்குக் கொண்டுவந்தார். இதுதான் ஆளுநர் பார்வையில் கலாச்சாரப் படுகொலை.

ஜாதியக் கட்டமைப்பு எப்படி ஏற்படுத்தப்பட்டது? உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற கோட்பாட்டை உருவாக்கி, அதைப் பெரும்பான்மை மக்களை நம்பவைத்து அதை ஏற்கவும் செய்தனர். வீட்டில் கிளியோ, நாயையோ வளர்த்தால் அது தனது வாழ்விடத்தை மறந்து நம்முடன் வாழப் பழகிவிடும். அதுபோன்று இந்த அப்பாவி மக்களை “நீ தாழ்ந்தவன், உன்னால் எதுவும் செய்ய முடியாது” என்று சொல்லி நம்ப வைத்துக் கழுத்தறுத்த அநீதி இந்தியத் துணைக் கண்டத்தைத் தவிர உலகில் வேறெங்கும் நிகழவில்லை. எனவே இந்த ஜாதிய அடிமைத்தனத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் அறுத்தெறிய வேண்டும்.

இன்றைக்கு பழங்குடி வகுப்பில் இருந்து இந்தியாவின் குடியரசுத் தலைவராக திரவுபதி முர்மு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் பெரியார் பேசிய சமூகநீதி, இட ஒதுக்கீடு, சுயமரியாதை என்ற கோட்பாடுகள்தான். இதற்கு ஆளுநர் ரவியிடம் பதில் உண்டா?

நமது இனத்தின் அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளது. நமக்குப் பல கொடுமைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அந்த வரலாற்றைத்தான் பேச வேண்டும். வரலாற்றைப் பேசாதவன் மயக்கத்தில் இருப்பதற்குச் சமம் என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே தந்தை பெரியார் பேசியது இனவெறி அல்ல. நாம் பேசுவது இனவெறி அல்ல, மாறாக ஒரு இனத்தின் விடுதலையைப் பேசுகிறோம். நம்மை அடிமைப்படுத்தி, நமது உழைப்பைச் சுரண்டிய கொடுங்கோலர்களின் வரலாற்றை நாம் பேசிக்கொண்டே இருக்க வேண்டும்.

> **எனக்கும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருக்கும் நீண்டகாலத் தொடர்பு இருக்கிறது. நான் கடந்துவந்த பாதையை அடிக்கடி நினைத்துப் பார்ப்பது உண்டு. நான் கொளத்தூர் மணி அவர்களை கூடங்குளம் அணு உலைக்கு எதிரானப் போராட்டக் களத்தில் தான் முதன்முதலாகச் சந்தித்தேன். அப்போது அவரைச் சார்ந்த தோழர்கள் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வந்திருந்தனர். அதுமட்டுமில்லாமல் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான பரப்புரையைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கு எங்களுக்கு உறுதுணையாக இருந்த இயக்கம் திராவிடர் விடுதலைக் கழகம்.**

இன்றைக்கு நாம் மாநில சுயாட்சி குறித்து பேசி வருகிறோம். ஆனால் பெரியார் அன்றைக்கே தனித்தமிழ்நாடு கேட்டார். சிலர் விரக்தியின் வெளிப்பாட்டில்தான் பெரியார் அப்படிக் கேட்டார். பெரியாருக்கு அப்படி என்ன விரக்தி? முதல்வராக முடியவில்லை என்ற விரக்தியா? இல்லை பெரிய கட்சிக்குத் தலைவராகவில்லை என்ற விரக்தியா? அப்படியெல்லாம் இல்லை. அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர். அன்றைக்கு இருந்த சூழலில் நமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால் தனித்தமிழ்நாடு ஒன்றே தீர்வு என்று தந்தை பெரியார் பேசினார். அதற்குப் பின்னர் பேரறிஞர் அண்ணா ஒன்றியத்தில் கூட்டாட்சி என்று முழங்கினார்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் இல்லத்தில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில் இந்திய பிரதமர் கலந்துகொள்கிறார். இதற்குக் காங்கிரஸ் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனத்தைப் பதிவுசெய்தது. ஆனால் இதற்குப் பதிலளித்த மோடி “காங்கிரஸ் கட்சி விநாயகர் மீது வெறுப்பைக் கக்குகிறது” என்றார். நீதித்துறையில் அரசியல் தலையீடு இருந்தால் அது தனது தனித்தன்மையை இழந்துவிடும்.

இந்த நாட்டின் பலமே இந்திய அரசியலமைப்புச் சட்டம்தான். அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏன் இப்போது வலுக்கிறது? மன்னராட்சியில் மறுக்கப்பட்ட நமது அடிப்படை உரிமைகள் எல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகத்தான் நமக்குக் கிடைத்தது. ஆனால் இன்றைக்கு மீண்டும் மன்னராட்சியைக் கொண்டுவர பாஜக திட்டமிட்டு வருகிறது.

மக்களைக் கவருவதில் மூன்று விதம் இருக்கிறது. அவை, இரக்கப்பட்டு பேசுவது, நெறிமுறைகளைப் பற்றிபேசுவது, எதார்த்தத்தைப் பேசுவது. இந்த மேடை எதார்த்தத்தைப் பேசுகிறது. ஆனால் மற்ற இரண்டும் நம்மைச் சிந்திக்கவிடாது, நமது உணர்வுகளோடு விளையாடுவது.

நாயை எடுத்துக்கொண்டால் கூட ஜெர்மன் செப்பர்டு, அல்சீசன் என்று பல வகைகள் உண்டு. அதேப்போல மாடு வகைகளை எடுத்துக்கொண்டால் காங்கேயன், ஜெர்சி எனப் பல வகைகள் உண்டு. மனிதரில் கூட அய்ரோப்பியன், ஆப்பிரிக்கன், மங்கோலியன் என பல இனங்கள் உண்டு. ஆனால் ஜாதி எங்கே இருக்கிறது? ஒத்த வயதுடைய பத்து குழந்தைகளை ஒன்றாக நிற்கவைத்து இவர்கள் எந்த ஜாதி என்று கண்டுபிடிக்கச் சொன்னால் நிச்சயம் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் இவர்கள் எல்லாம் ஒரே இனம், ஆனால் அய்ரோப்பியக் குழந்தைகளை அருகே நிற்கவைத்தால் அவர்களை எளிதில் கண்டுபிடித்து விடலாம். இப்படி இல்லாத ஜாதியை மக்கள் மத்தியில் புகுத்தியுள்ளனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீட் தேர்வு ஏழை எளிய மாணவர்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடியது. அவர்களால் தனியாகப் பயிற்சி மய்யங்களுக்கு சென்று படிக்க முடியாது. அதனால்தான் கலைஞர் உயர்கல்வி செல்வதற்கு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு போதும் என்ற கொள்கை முடிவுக்கு வந்தார். மாணவர்களுக்காக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செய்துவருகிறது. அந்த மாநில அரசின் பாடத்திட்டத்தில் படித்து அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு எதற்கு நீட்தேர்வு? நீட், ஜெ.இ.இ. போன்ற நுழைவுத் தேர்வுகளெல்லாம் மாணவர்களை மடையர்களாக மாற்றுகிறது.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், விஷ்வகர்மா திட்டத்தைக் கொண்டுவந்துள்ளோம் என்கிறார். ஆனால் இந்த தர்மம்தான் சூத்திரர்களைப் படிக்கவிடாமல் செய்தது. பார்ப்பனரல்லாத மக்களைக் குலத்தொழிலை நோக்கி இழுத்துச்சென்றது. இப்படி ஒன்றிய அரசு கொண்டுவருகிற ஒவ்வொரு திட்டமும் பெரும்பான்மை இந்துக்களை ஏமாற்றும் விதமாகத்தான் இருக்கிறது.

இன்றைக்கு மோடி அரசை நாம் எதிர்ப்பதற்கான காரணம் என்ன? நாட்டில் 80 விழுக்காடு மக்கள் குறுகிய இடத்தில், குறுகிய வருமானத்தோடு, குறுகிய வாழ்வாதாரத்தோடு வாழ்ந்துவருவதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? நாட்டில் வீடு இல்லாமல், ஒருவேளை உணவு கிடைக்காமல், படிக்க வாய்ப்பற்ற மக்கள் இன்றளவும் இருந்து வருகிறார்கள். ஆனால் இவைகளின் மீதெல்லாம் கவனம் செலுத்தாமல் கார்ப்பரேட் முதலாளிகளின் நலனுக்காகவே தனது ஆட்சியை நடத்திவருகிறார் மோடி.

நமது கருத்துரிமை மறுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களில் இந்தி திணிக்கப்படுகிறது. இலக்கண, இலக்கிய வளம்கொண்ட செம்மொழியாம் தமிழுக்கு சொற்ப நிதியை ஒதுக்குகிறார்கள். தாய்மொழி என்பது நமது அடையாளம், எனவே எக்காரணம் கொண்டும் தாய்மொழியை நாம் விட்டுக்கொடுக்கமுடியாது.

சனாதனம் பேசுபவர்களுக்கும் தமிழுக்கும் மிகப்பெரிய அளவில் முரண் காணப்படுகிறது. காரணம், சங்க இலக்கியங்களில் கடவுள் வழிபாடு என்பதே கிடையாது. அய்யன் திருவள்ளுவர் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று முழங்கியவர். இப்படி இருக்கையில் தமிழை அவன் எப்படி ஏற்றுக்கொள்வான். அதனால்தான் தமிழுக்கு எதிராக இத்தனை வேலைகளையும் சனாதனவாதிகள் செய்துவருகின்றனர்.

திராவிட இனம் என்பது சாதாரண இனம் அல்ல, நான் பிறந்த குமரி மாவட்டத்தில் அய்யா வைகுண்டர் இருக்கிறார். ‘தாழக்கிடப்பவனைத் தற்காப்பது தர்மம்’ என்று அய்யா வைகுண்டர் பேசியிருக்கிறார். இதுதான் தமிழர்களின் தர்மம். ஆனால் சனாதனவாதிகள் பேசக்கூடிய தர்மம் என்பது மேலே இருக்கக்கூடிய எங்களைக் கீழே தள்ளி மிதிக்கும் தர்மம்தான் உங்களுடையது. இந்தத் தர்மம் எங்களுக்குத் தேவையில்லை. அவர்கள் மக்களை எந்தளவிற்கு மனமாற்றம் செய்யமுடியுமோ அந்தளவிற்குக் கடுமையாக மக்களிடம் பேசி வருகிறார்கள். எனவே இதில் இருந்து விடுபட வேண்டுமானால் நமது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மொழி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இனங்களின் தனித்துவ அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு மாநில சுயாட்சிதான் தீர்வாக இருக்க முடியும்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# குமாரபாளையத்தில் குடிஅரசு - சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா



**நாமக்கல் :** தந்தை பெரியாரின் 146ஆவது பிறந்தநாள் விழா மற்றும் குடிஅரசு - சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் 22.09.2024 அன்று குமாரபாளையம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. கழக நாமக்கல் மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் தலைமை தாங்கினார். மாவட்டக் காப்பாளர் கேப்டன் அண்ணாதுரை முன்னிலை வகித்தார்.

முதல் நிகழ்வாக பெரியாரியலாளர் சிற்பி இராசனின் மந்திரமா? தந்திரமா? பகுத்தறிவு நிகழ்ச்சி நடைபெற்றது. குமாரபாளையம் நகரக் கழகத் தலைவர் தண்டபாணி, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு ஆகியோர் தொடக்கவுரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மேலும் கழகத் தலைவருக்கு திராவிடர் கழக மாவட்டத் தலைவர் ஆர்.கே.குமார், நகரச் செயலாளர் சரவணன் ஆகியோர் பயணாடை அணிவித்து மகிழ்ந்தனர்.

இதில் மேட்டூர், கொளத்தூர், நங்கவள்ளி, வெண்ணந்தூர், காளிப்பட்டி, ராசிபுரம், பள்ளிபாளையம், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். நகரத் துணைச் செயலாளர் பி.மாதேஸ்வரன் நன்றி கூறினார்.

செப்டம்பர் 17ஆம் தேதி அன்று பெரியார் பிறந்தநாள் விழா இருசக்கர வாகனப் பேரணி குமாரபாளையம் காவேரி நகரில் தொடங்கியது. அங்கு கழகக் கொடியை ரேணுகா தேவி ஏற்றி வைத்தார். அடுத்ததாக பாலம் பிரிவு ரோட்டில் வெண்ணந்தூர் ராமச்சந்திரனும், பேருந்து நிலையம் அருகே சுமதி மணிராசும், எம்.ஜி.ஆர் நகரில் தேவி மாதேஸ்வரனும், கம்பன் நகர் காமராஜர் சிலை, கச்சேரி சமத்துவபுரம் பெரியார் சிலை உள்ளிட்ட இடங்களில் கழகக் கொடியேற்றி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பேரணியில் கேப்டன் அண்ணாதுரை தலைமையில் தண்டபாணி, வடிவேலு, மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன், மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, ராசிபுரம் பிடல் சேகுவாரா, காளிப்பட்டி பெரியண்ணன் மற்றும் பள்ளிபாளையம் பகுதித் தோழர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.


## மயிலாப்பூரில் சிந்தனைப் பலகை திறப்பு!



தந்தை பெரியார் 146வது பிறந்தநாளை முன்னிட்டு மயிலாப்பூரில் பெரியார் சிந்தனைப் பலகையை ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி திறந்து வைத்தார். பகுதித் தமிழ் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வை மயிலைப் பகுதித் தோழர்களான மாணிக்கம், அருண், அஸ்வின், கார்த்திக் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

## தோழர் தேவ.சீனி சுந்தரம் மறைந்தார் உடல் கொடையாக வழங்கப்பட்டது



மதுரை: பெரியார் திராவிடர் கழகத்தின் சிவகங்கை முன்னாள் மாவட்டத் தலைவரும், மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் காப்பாளருமான தளபதி அவர்களின் தந்தையுமான தேவ.சீனி.சுந்தரம் 21.09.2024 அன்று முடிவெய்தினார்.

23.09.2024 அன்று நடைபெற்ற இறுதி நிகழ்வை பெண்களே முன்னின்று நடத்தினர்.சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அவரது “உடல் கொடை”யாக வழங்கப்பட்டது.

முன்னதாக கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் த.தே.ம.மு. தலைவர் மீ.த.பாண்டியன், த.தே.பே, தி.க உள்ளிட்ட தோழமை அமைப்பினரும் பங்கேற்றனர்.

# மேட்டுப்பாளையத்தில் பெரியாரின் 146வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்; திருப்பூர் துரைசாமி, சிற்பி இராசன் பங்கேற்பு



**மேட்டுப்பாளையம்:** பெரியார் 146வது பிறந்த நாள் விழா 29.09.2024 அன்று மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. இதற்குக் கோவை மாவட்டக் கழகத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமசந்திரன் தலைமை தாங்கினார்.

முன்னதாக சிவரஞ்சனி திரையரங்கம் முன்பு திராவிடர் விடுதலைக் கழகத்தின் மேட்டுப்பாளையம் நகரப் பொறுப்பாளர் அமுல்ராஜ் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

முதல் நிகழ்வாகப் பெரியாரியலாளர் சிற்பி ராசனின் மந்திரமல்ல! தந்திரமே! அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் மூலம் சாமியார்களின் பித்தலாட்டங்களைத் தோலுரித்துக் காட்டினார்.

பொதுக்கூட்டத்தில் கோவை மாவட்ட அமைப்பாளர் தமிழ்ச்செல்வி, மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் நவீன் குமார், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாகக் கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி சிறப்புரையாற்றினார். மேட்டுப்பாளையம் நகரப் பொறுப்பாளர் அமுல்ராஜ் நன்றி கூறினார்.

நிகழ்வில் கோவை மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர் செல்வம்,திருப்பூர் மாநகரத் துணைத் தலைவர் மாரிமுத்து, திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, திருப்பூர் மாவட்டப் பொருளாளர் ரவிச்சந்திரன், திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், காரமடை செகதீஸ், திமுக தோழர்கள் இங்கர்சால், ரங்கராஜ், தி.க மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் வேலுசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

## கள்ளக்குறிச்சியில் பெரியார் பிறந்தநாள் விழா



**கள்ளக்குறிச்சி:** தந்தை பெரியாரின் 146ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக சார்பில் 17.09.2024 அன்று கடுவனூர் பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து சங்கராபுரம் பெரியார் சிலைக்கு ரிஷிவந்தியம் ஒன்றியத் தலைவர் மா. குமார் ரிஷிவந்தியம் ஒன்றியத் தலைவர் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. செந்தமிழ் பட்டு கிராமத்தில் சே.வே.இராஜேசு தலைமையிலும் பெரியார் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

இதில் ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் இரா. கார்மேகம், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ. முருகன், தே.ராமச்சந்திரன், தென்னரசு, சூர்யா நீதிபதி, மு. நாகராஜ், கா.பழனிச்சாமி, சு.வல்லரசு, வீ.தனுஷ், க.குபேந்திரன், மணிவேல், சுதாகர், ஐயப்பன், ராஜ்குமார், சரத்குமார், ராஜா, வே.ராஜா பிரசாந்த், மாரியாபிள்ளை, விஜய், குரல் குணா, ரோனித், விஸ்வா, ராகுல், விவேகன், பகுத்தறிவாளன், யாழினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 04, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran